செ.வெ.எண்-14 நாள்-08.02.2018

# அரியலூர் மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு குறைத்தீர்க்கும் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.க.லட்சுமி பிரியா, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (08.02.2018) நடைபெற்றது.

அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் அரியலூர் மாவட்டத்தை சார்ந்த **மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு குறைதீர்க்கூட்டம்** மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.க.லட்சுமி பிரியா, இ.ஆ.ப.,** அவர்கள் தலைமையில் இன்று (08.02.2018) நடைபெற்றது.

**இக்கூட்டத்தில், மாவட்ட ஆட்சியர் அவர்கள் பேசியதாவது :-**

தமிழக அரசு மாற்றுத்திறனாளிகளுக்கென பல்வேறு நலத்திட்ட உதவிகளை சிறப்புடன் செயல்படுத்தி வருகிறது. இதன் தொடர்ச்சியாக இன்று (08.02.2018) அனைத்துத்துறை அரசு அலுவலர்கள் பங்கேற்புடன் மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு குறைகள் தீர்க்கும் விதமாக இக்கூட்டம் நடத்தப்பட்டது.

இக்கூட்டத்தில், 225 கோரிக்கை மனுக்களை மாற்றுத்திறனாளிகளிடமிருந்து பெறப்பட்டு, அம்மனுக்கள் மீது நடவடிக்கை எடுக்க சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

மாற்றுத்திறனாளிகள் எளிதாக அறிந்துகொள்ளும் வகையில் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பாக செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்து, துண்டு பிரசுரங்கள் அனைத்து மாற்றுத்திறனாளிகளுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், மாற்றுத்திறனாளிகள் அனைவரும் மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய அடையாள அட்டை பெற்று, தமிழக அரசின் அனைத்து நலத்திட்டங்களை பெற்று பயனடையுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.க.லட்சுமி பிரியா, இ.ஆ.ப.,** அவர்கள் பேசினார்கள்.

பின்னர், பாரா விளையாட்டு சங்கம் சார்பில் மாவட்ட மற்றும் மாநில அளவில் நடைபெற்ற பாரா விளையாட்டு போட்டிகளில் குண்டு எறிதல், தட்டு எறிதல் ஆகிய போட்டிகளில் முற்றிலும் பார்வையற்ற மாற்றுத்திறனாளிகளுக்கான பிரிவில் முதலிடம் பெற்று, தங்கப்பதக்கம் வென்று, உலக அளவில் நடைபெறும் போட்டிகளுக்கு தேர்வாகி, ஜப்பான், துளாசியா, சீனா ஆகிய நாடுகளில் நடைபெறும் ஆசியக்கோப்பை பாரா விளையாட்டு போட்டியில் பங்கேற்கும் அரியலூர் மாவட்டத்தைச் சேர்ந்த **எஸ்.சிவகாமி** என்ற மாற்றுத்திறனாளியை மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.க.லட்சுமி பிரியா, இ.ஆ.ப.,** அவர்கள் சான்றிதழ் வழங்கி, வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்தார்கள்.

பின்னர், மாநில அளவில் நடைபெற்ற பாரா விளையாட்டு போட்டிகளில் ஈட்டி எறிதல், குண்டு எறிதல் ஆகிய பிரிவுகளில் வெற்றிபெற்று வெள்ளி பதக்கம் பெற்ற அரியலூர் மாவட்டத்தைச் சேர்ந்த **ஜி.ராஜாகுமாரி** என்ற மாற்றுத்திறனாளியையும், 100 மீ ஓட்டம், 200 மீ ஓட்டம், தொடர் ஓட்டம் ஆகிய பிரிவுகளில் வெற்றி பெற்று வெள்ளி பதக்கம் பெற்ற அரியலூர் மாவட்டத்தைச் சேர்ந்த **எம்.தமிழ்வேல்** என்ற மாற்றுத்திறனாளியையும் மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.க.லட்சுமி பிரியா, இ.ஆ.ப.,** அவர்கள் பாராட்டி, சான்றிதழ்களை வழங்கினார்கள்.

இக்கூட்டத்தில், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் ஆர்.பாலாஜி, துணை ஆட்சியர் (சமூகபாதுகாப்புத்திட்டம்) ஜெ.பாலாஜி, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித்திட்ட அலுவலர் ஜெ.ஜெயராணி, மாவட்ட சமூக நல அலுவலர் ப.பூங்குழலி மற்றும் மாற்றுத்திறனாளிகள், அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**